**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.58/14**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.11** |
| **Name** | **:** | **Thiru. JAYAPRAKASH** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06.01.2023.**

முதல் விசாரணை -

நான் தற்போது ஆரணி அரசு மருத்துவமனையில் சிவில் சர்ஜனாக பணிபுரிகின்றேன். கடந்த 27.04.2012 அன்று ஆரணி அரசு மருத்துவமனையில் பணியிலிருந்த போது பெரணமல்லூர் காவல் ஆய்வாளர், பெரணமல்லூர் காவல் நிலைய குற்ற எண்.232/2012, சட்டப்பிரிவுகள் 302, 397 இ.த.ச. வழக்கில் இறந்து போன மதன்குமார், வயது 4, த/பெ சரவணன், ரோட்டு தெரு, விநாயகபுரம், வந்தவாசி வட்டம் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கான கடிதத்துடன் தலைமை காவலர் திரு. சேகர் என்பவர் ஆஜர்படுத்தினார்.

27.04.2012 அன்று மதியம் 12.30 மணியளவில் ஆரணி அரசு

மருத்துவமனை சவக்கிடங்கில் தலைமை காவலர் திரு. சேகர் பிரேதத்தை அடையாளம் காட்டிய பின்பு பிரேத பரிசோதனை மதியம் 2.30 மணிக்கு ஆரம்பமானது. இரண்டு கை, இரண்டு கால்களில் சவ விறைப்பு தன்மை இருந்தது. கழுத்தைச் சுற்றிலும் முழு வட்ட வடிவில் கிடைமட்டமான 28 செ.மீ. நீளமும் 0.25 செ.மீ. அகலமும், 0.25 செ.மீ. ஆழமும் உடையதாக இருந்தது.

தைராய்டு குருத்தெலும்பிற்கு கீழே காணப்பட்டது. கழுத்தைச் சுற்றிலும் இருந்த காயம் சிவந்தும், மென்மையாகவும் இருந்தது. இடது பக்க கழுத்தில் சந்திர பிறை வடிவ இரண்டு நகத்தால் ஏற்பட்ட சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது. இரண்டும் 1/4 x 1/4 செ.மீ. அளவில் காணப்பட்டது. வலது பக்க கழுத்தில் மூன்று சந்திர பிறை வடிவ நகத்தால் ஏற்பட்ட சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது. கழுத்தைச் சுற்றிலும் ஏற்பட்ட காயத்திற்கு கீழ் இரத்த திட்டுக்கள் காணப்பட்டது.

கழுத்தை இறுக்கிய காயத்திற்கு கீழ் இருந்த தசைகள் கன்றிய காயங்களுடன் காணப்பட்டது. கழுத்தில் இருந்த காயத்திற்கு கீழ் தோளிற்கு கீழே கான்றிய காயங்கள் காணப்பட்டது. கழுத்தெலும்பு எலும்பு முறிவுடன் காணப்பட்டது. மூச்சுக் குழாய் குருத்தெலும்பில் எலும்பு முறிவு காணப்பட்டது. முகம் கன்றியும் நீல நிறத்துடனும் காணப்பட்டது. ஆங்காங்கே ரத்த திட்டுக்கள் காணப்பட்டது. மூக்கு நாசி துவாரங்களில் இரத்தம் தோய்ந்து காணப்பட்டது.

கண் நீல நிறத்துடனும் குழம்பியும் காணப்பட்டது. கழுத்தைச் சுற்றிலும் ஒரு முழு வட்ட வடிவில் ஒரு காயம் இருந்தது. மூளை சிவந்தும் 750 கிராம் எடையுடனும் காணப்பட்டது. இருதயம் 110 கிராம் எடையுடனும் சிவந்தும் காணப்பட்டது. வலது நுரையீரல் 165கிராம் எடையுடனும், இடது நுரையீரல் 150 கிராம் எடையுடனும் சிவந்தும் காணப்பட்டது. இரைப்பையில் 150 மி.லி.

அளவுள்ள ஓரவுள்ள செரிமானமான உணவு காணப்பட்டது. சிறுகுடல் மற்றும் பெருங்குடல் வாயுவினால் உப்பிய நிலையில் இருந்தது. மண்ணீரல் 90 கிராம் எடையுடன் காணப்பட்டது.

ஒவ்வொரு சிறுநீரகமும் 80 கிராம் எடையுடனும் சிவந்தும் காணப்பட்டது. பிரேத பரிசோதனை 27.04.2012 அன்று மாலை 4.00 மணியளவில் நிறைவடைந்தது. இரைப்பை, சிறுகுடல், கல்லீரல், சிறுநீரகம், கழுத்தெலும்பு ஆகிய உள்ளுறுப்புகள் இராசயன பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

கழுத்தெலும்பு பரிசோதனை அறிக்கையின் படியும் உள்ளுறுப்புகள் பரிசோதனை அறிக்கையின் படியும் மேற்சொல்லப்பட்ட நபர் ஒரு நபரால் கைகளால் மிகுந்த அழுத்தத்துடனும் கொடூரமாகவும் கழுத்தில் தாக்கும் போது ஏற்பட்டதால் சுவாச தடை மற்றும் இருதய துடிப்பு நிறுத்தம் காரணமாக இறப்பு ஏற்பட்டிருக்க கூடும் என்று கருத்து தெரிவித்தும், இறப்பானது 20 முதல் 26 மணி நேரத்திற்கு பிரேத பரிசோதனைக்கு முன்பு இறந்திருக்க கூடும் என்று சான்றளித்தேன்.

கழுத்தெலும்பு பரிசசோதனை ஆய்வறிக்கையில் இன்டாக்ட் என்று சொல்லியிருந்தாலும் கொடூரமான மிகுந்த அழுத்தத்துடன் கழுத்தில் அழுத்தம் கொடுக்கபட்டு என்று சொல்லப்பட்டும் கழுத்தைச் சுற்றியிருந்த பகுதிகளில் இரத்தம் உறைந்திருந்தது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. நான் அளித்த பிரேத பரிசோதனைம அறிக்கை <u>அ.த.சா.ஆ.8-</u>ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-</u>

கழுத்து காயம் எந்தவித ஒரு பொருளோ ஆயுதமோ பயன்படுத்தியதற்கான

அறிகுறி இல்லை என்றால் சரிதான். காயத்தின் நிறத்தை வைத்து பார்க்கும் போது அந்த காயங்கள் இறப்பிற்கு முன் ஏற்பட்டதா அல்லது பின்பு ஏற்பட்டதா என்று என்னால் சொல்ல முடியாது என்றால் கருப்பு நிற காயமாக இருந்தது என்பதால் காயத்திற்கு வயது 36 மணி நேரத்திற்குள் இருக்கும்.

**மறு விசாரணை** - இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ K. Vijaya,
Additional Sessions Judge,
Arani.